[2003 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 66, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

66—

தங்கும் விடுதி

***344—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க போதுமான இட வசதிக்காகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) கோயில் பகுதியில் பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க திருக்கோயிலுக்குச் சொந்தமான 110 குடியிருப்புகள் ஏற்கெனவே உள்ளன. இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு மிக அருகில் அம்மன் சன்னதி முன்புறம் பழைய சேது இல்லம் தங்கும் விடுதிக் கட்டடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்ட இடத்தில், தோராயமாக, ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து பயணிகளைக் கவரும் விதத்தில் வணிக வளாகத்துடன்கூடிய தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் ஏன் கட்டடக் கலையையும் உலகத்திற்கே பறைசாற்றக்கூடிய வகையிலே, மிகப் பிரம்மாண்டமான முறையிலே அமைந்துள்ள இந்த இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு போதுமான வசதி, தங்கும் விடுதிகள் இல்லாமல், பல்வேறு சந்தர்ப்பங்களிலே வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் அவதியுறுகிறார்கள். குறிப்பாக, சென்ற முறை நானே,

2003 மார்ச் 25]

அதுவும் சட்டமன்றக் கமிட்டியிலே சென்றிருந்தபோது அங்கு தங்குவதற்கு இடம் இல்லாமல், விடுதியிலே, ஹோட்டலிலே எங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்கள். ஆகையினால், தற்போது அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அந்த 110 விடுதிகள் என்பது போதுமானதாக இல்லை. உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை தமிழ் மக்களும் வந்து செல்லக்கூடிய, வெளிநாட்டுப் பயணிகள் வந்து செல்லக்கூடிய அருமையான சுற்றுலாத் தலமாக உள்ள இந்த இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு இன்னும் போதுமான அளவிற்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலில் மொத்தம் 110 குடில்கள் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு பயணிகள் மற்றும் பக்தர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. அங்கே மொத்த அறைகள் 104 இருக்கின்றன. வேண்டிய அளவிற்கு இப்போது தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கைக்கிணங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வட மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் அதிகமான அளவில் வருவதால், தற்சமயம் 75 இலட்சம் ரூபாய் அளவில் கட்டுவதை ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டுவதற்கு அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன், கட்டுவோம் என்று சொல்லிவிட்டார்.

திரு. ஐ. கணேசன்: அரசுக்கு எங்களுடைய மனப்பூர்வமான நன்றியைச் சொல்லி, மிக விரைவிலே இந்தக் கட்டடத்தை, இந்த நிதியாண்டிலேயே ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கட்ட அரசு முன்வர வேண்டுமென்று உங்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிக விரைவில் என்றால் கூடாரம்தான் போடமுடியும். கட்டடம் கட்டுவதற்கு நாளாகும் அல்லவா? (சிரிப்பு)

[2003 மார்ச் 25

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படிப்பட்ட ஆலயங்களில் பல்வேறு கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் கூடியவிரைவில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் திருக்கோயில் என்பது தமிழகத்தில் இருக்கின்ற கலைகளின் இருப்பிடமாக இருக்கிறது. அங்கே பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொன்னார்கள், பயணிகளைக் கவரும் விதம் என்று சொன்னால் என்னென்ன அம்சங்கள் அங்கே இடம் பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்லவில்லை. கேள்வியிலேயே பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று இருக்கிறது.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: அவருடைய பதிலிலே அந்த வார்த்தை இருந்தது.

மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம், ஒற்றைப் படுக்கை அறை 8, இரட்டைப் படுக்கை அறை 50, இரட்டைப் படுக்கைக் கூடம் 4, நால்வர் படுக்கைக்கூடம் 22...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உங்களைக் குடும்பத்தோடு வாச் சொல்கிறார். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: இவை எல்லாம் இருக்கிறது. மேலும் பக்தர்கள் வரக்கூடிய அளவிற்கு தங்குவதற்கு நவீனமான முறையில் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.

67—

செவிலியர் பயிற்சிக் கல்லூரி

***8631—திருமதி எஸ்.ராஜம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி, அரசு சார்பாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியானது, தூத்துக்குடி மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். இங்கே அரசு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. மருத்துவக் கல்லூரி இருப்பதால் இங்கு அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைந்தால் அண்டை மாவட்டங்களும் பயன்பெற வாய்ப்புண்டு. அரசு மறுபரிசீலனை செய்து, வரும் கல்வி ஆண்டிலாவது அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்படுமா என்றுதான் மூலக்கேள்வியிலே கேட்டிருக்கிறார் அவர் அமைக்க விருப்பம் தெரிவித்திருப்பது, College of Nursing, B.Sc. Nursing படிக்க அந்தக் கல்லூரியை கேட்டிருக்கிறார். அதை அமைப்பதற்கு சாத்தியம் இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறபடி